(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை

11 சைவசமய பாடப்பரீட்சை : 2020

தரம் பதினொன்று

nselva.com



கால அளவு	3.00 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. இளங்கோவடிகள் இயற்றிய காவியம்.
   1) இராமாயணம் 2) மகாபாரதம் 3) சிலப்பதிகாரம் 4) மூதுரை
2. போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட நல்லூர் கந்தசாமி கோயில் மீள புனரமைக்கப்பட்டது ஆண்டு.
   1) 1773 2) 1791 3) 1635 4) 1821
3. சற்புத்திர மார்க்கத்தைக் கடைப்பிடித்துக் காட்டியவர்.
   1) அப்பர் 2) திருஞானசம்பந்தர் 3) திருமூலர் 4) சுந்தரர்
4. ஜனநாதமங்கலம் என்றழைக்கப்பட்ட இடம்.
   1) அனுராதபுரம் 2) பொலன்னறுவை 3) யாழ்ப்பாணம் 4) கதிர்காமம்
5. இராகு, கேது, கிரகங்கள் வேறு எப்பெயர் கொண்டழைக்கப்படுகின்றன.
   1) ஞாயிறு 2) சாயா 3) குரு 4) யோகம்
6. வரலட்சுமி விரதம் அனுட்டிக்கும் பெண்கள் வலது கையில் அணியும் மஞ்சள் நூலில் எத்தனை முடிச்சுக்கள் காணப்படும்.
   1) 06 2) 08 3) 07 4) 09
7. சந்தப்பாடல்கள் அடங்கிய நூல்.
   1) திருமந்திரம் 2) அபிராமி அந்தாதி
   3) சகலகலாவல்லிமாலை 4) திருப்புகழ்
8. மார்கழி மாதம் அனுட்டிக்கப்படும் சிவ விரதம்.
   1) கார்த்திகை தீபம் 2) திருவாதிரை 3) நவராத்திரி 4) விநாயக சஷ்டி
9. வேதத்தை போலவே ஆகமங்களும் இறைவனால் அருளப்பட்டவை என்று கூறியவர்.
   1) திருமூலர் 2) அருணகிரிநாதர் 3) கச்சியப்பர் 4) திருமால்
10. பஞ்சபூதங்களில் அக்கினியை குறித்து வழிபடும் தலம்.
    1) சிதம்பரம் 2) சீர்காழி 3) திருவண்ணாமலை 4) நகுலேச்சரம்
11. ஆறுமுக நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்த ஆண்டு.
    1) 1940 2) 1848 3) 1847 4) 1855
12. தினமும் பன்னிரண்டு காலப்பூசை இடம்பெறும் ஆலயம்.
    1) சிதம்பரம் 2) திருச்செந்தூர்
    3) கதிர்காமம் 4) சபரிமலை ஐயப்பன்

13. பசு என்பது குறிக்கும் சொல்.
1) ஆணவம் 2) ஆன்மா 3) பாசம் 4) இறைவன்

14. மாமாங்கப் பிள்ளையார் ஆலய தல விருட்சம்.
1) அரசமரம் 2) வில்வமரம் 3) குருந்தமரம் 4) நொச்சிமரம்

15. மார்கண்டேயரது தந்தை பெயர்.
1) வீரமா முனிவர் 2) மிருகண்டு முனிவர்
3) பீஷ்மர் 4) யமதக்கினி முனிவர்

16. சிவாகமங்களின் எண்ணிக்கை.
1) 18 2) 09 3) 28 4) 32

17. சாக்த நெறிக்கு உரிய ஆகமங்கள்.
1) சிவாகமங்கள் 2) பஞ்சராத்திரம் 3) தந்திரங்கள் 4) திருமுறைகள்

18. பராபரக்கண்ணி நூலை அருளியவர்.
1) தாயுமானவர் 2) ஆண்டாள் 3) கச்சியப்பர் 4) நம்மாழ்வார்

19. ''அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது.....'' என்று கூறியவர்.
1) திருமூலர் 2) ஔவையார்
3) திருவள்ளுவர் 4) காரைக்கால் அம்மையார்

20. சமூகத்தின் தேவையறிந்து செய்யும் அறச்செயல்கள் எவ்வாறு அழைக்கப்படும்.
1) ஈகை 2) அன்புடைமை
3) ஒப்புரவு 4) திறமை

21. அச்சுதன் என்ற திரு நாமம் கொண்டவர்.
1) சம்பந்தர் 2) திருமால் 3) கர்ணன் 4) மகாபலி

22. ஆலயத்தை புதிதாக அமைத்து அங்கு இறைவனைப் பிரதிஷ்டை செய்வது எவ்வாறு அழைக்கப்படும்.
1) அந்தரிதம் 2) ஆவர்த்தனம் 3) அநாவர்த்தனம் 4) புனராவர்த்தனம்

23. சயந்தனின் தந்தை.
1) சந்திரன் 2) சூரியன் 3) இந்திரன் 4) வீரபாகுதேவர்

24. ஸ்ரீ கிருஷ்ணர் உபதேசித்தது.
1) வேதம் 2) பகவத்கீதை 3) பாமாலை 4) திருப்பாவை

25. தமிழ் மூவாயிரம் எனப்போற்றப்படும் நூல்.
1) திருக்குறள் 2) திருமந்திரம் 3) தேவாரம் 4) திருவாசகம்

26. கேதாரகௌரி விரதத்துடன் தொடர்புடையவர்.
1) சரஸ்வதி 2) இலக்குமி 3) உமாதேவியார் 4) ஆண்டாள்

27. இராசதம், தாமதம், சாத்துவிகம் எனப்படுபவை.
1) முப்பொருட்கள் 2) முக்குணங்கள் 3) மும்மலங்கள் 4) மூவகை வினைகள்

28. மார்கழி மாதம் விஷ்ணு ஆலயங்களில் பாடப்படுபவை.
1) திருவெம்பாவை 2) திருப்பாவை 3) அபிராமி அந்தாதி 4) கருடபுராணம்

29. ''கொற்றவன் குடி முதலியார்'' என அழைக்கப்பட்டவர்.
1) மறைஞான சம்பந்தர் 2) உமாபதி சிவாசாரியார்
3) சிவபெருமான் 4) அருணந்தி சிவாசாரியார்

30. சாய்ந்து கிடந்த சிவலிங்கத்தை அன்பினால் நிமிர்த்தியவர்.
1) நமிநந்தியடிகள் 2) குங்கிலியக்கலயர்
3) ராஜ ராஜ சோழன் 4) இராவணன்

31. அருணகிரிநாதர் வாழ்ந்த காலம்
1) கி.பி. 16ம் நூற்றாண்டு 2) கி.பி. 13ம் நூற்றாண்டு
3) கி.பி. 7ம் நூற்றாண்டு 4) கி.பி. 5ம் நூற்றாண்டு

32. ''எற்றான் மறக்கேன்'' ..... என்ற பதிகம் பாடியவர்.
1) திருஞான சம்பந்தர் 2) அப்பர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்

33. பாலாவியை தீர்த்தமாக கொண்ட தலம்.
1) திருக்கேதீச்சரம் 2) திருக்கோணேஸ்வரம்
3) வற்றாப்பளை 4) முன்னேச்சரம்

34. பத்தாம் திருமுறையாக வகுக்கப்பெற்றது.
1) திருவாசகம் 2) திருப்பல்லாண்டு
3) திருவிசைப்பா 4) திருமந்திரம்

35. நம்பியாண்டார் நம்பிக்கு ஞான அறிவை உணர்த்தியவர்
1) முருகன் 2) பிள்ளையார் 3) சிவபெருமான் 4) சேரமான்

36. தீபாவளி தினத்துடன் தொடர்புடையது.
1) மகிடாசுரவதம் 2) நரகாசுரவதம் 3) சூரசங்காரம் 4) யமசங்காரம்

37. பிதிர்க் கடனுக்குரிய சிறப்பான தினம்.
1) ஆடி அமாவாசை 2) புரட்டாதிச்சனி 3) பங்குனி உத்தரம் 4) கந்தசஷ்டி

38. ''வான் முகில் வழாது பெய்க'' என்ற திருப்பாடல் இடம் பெறும் புராணம்
1) பெரிய புராணம் 2) சூரிய புராணம் 3) கந்த புராணம் 4) திருப்புகழ்

39. சொக்கப்பனை கொளுத்தும் நிகழ்வு நடைபெறும் நாள்.
1) தீபாவளி 2) திருக்கார்த்திகை 3) நவராத்திரி 4) சித்திரை புது வருடம்

40. அபிராமி அந்தாதி எத்தனை பாடல்களை கொண்டது.
1) 99 2) 101 3) 111 4) 108

(40 புள்ளிகள்)

பகுதி - II

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. நித்திரை விட்டெழுந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?
2. சுந்தரர் முதலில் அருள் பெற்ற தலம் யாது?
3. சுவாமி விவேகானந்தர் இறைவனடி சேர்ந்த ஆண்டு எது?
4. திருவெம்பாவை விரதம் எத்தனை நாட்கள் அனுட்டிக்கப்படும்?
5. கந்த புராணம் எத்தனை பாடல்களைக் கொண்டமைந்துள்ளது?
6. ''குனித்த புருவமும்'' எனத் தொடங்கும் பாடலை பாடியவர் யார்?
7. ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' யாருடைய கூற்று?
8. மாத்தளை முத்துமாரியம்மன் தேர்த்திருவிழா நடைபெறும் நன்னாள் எது?

(8 x 2 = 16 புள்ளிகள்)

2. பின்வரும் திருப்பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதி அதன் பொழிப்புரையையும் எழுதுக.

1. "உம்பர் தருத்தேனு ....."
2. "உண்ணும் சோறு ....."
3. "கற்றவர் விழுங்கும் ....."
4. "மீளா அடிமை உனக்கே....."

(2 x 5 = 10 புள்ளிகள்)

3. பின்வரும் குறட்பாக்களுள் எவையேனும் நான்கினை எழுதுக.

1. “உண்ணாது நோற்பார் .....”
2. “அழுக்காறு உடையார்க்கு .....”
3. “பிறன் பழி கூறுவான் .....”
4. “சொல்லுக சொல்லில்.....”
5. “இரத்தலின் இன்னாது .....”

(4 புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. “மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு ....”

அ. திருநீற்றுக்கு வழங்கப்படும் ஐந்து பெயர்களை தருக.

ஆ. அவை ஐந்தும் எதற்காக அப்பெயர்களை பெறுகின்றன என்பதை சுருக்கமாக எழுதுக.

இ. திருநீற்றையும், திருநீற்று வைத்திருக்கும் பையையும் எவ்வாறு மதிக்க வேண்டும்?

(10 புள்ளிகள்**)**

2. “நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க”

அ. நாம் விரதம் அனுட்டிப்பதால் கிடைக்கப்பெறும் நன்மைகள் எவை?

ஆ. ஈழத்துச்சிதம்பரம் என்று போற்றப்படும் தலம் எது?

இ. அஷ்டலட்சுமிகளின் திருநாமங்களை தருக?

(10 புள்ளிகள்**)**

3. “இடிகொண்மாவினாற் பிண்டமேமாயினு மிடுக”

அ. அபரக்கிரியைகள் என்றால் என்ன?

ஆ. சபிண்டீகரணம் என்பதன் பொருள் யாது?

இ. மஹாளயம் என்பதைப் பற்றி எழுதுக?

(10 புள்ளிகள்**)**

4. “ஆலயந் தொழுவது சாலவும் நன்று”

அ. அநாவர்த்தனம் என்றால் என்ன?

ஆ. சதுரங்க ஷேத்திரம் என்று அழைக்கப்படும் தலம் எது?

இ. மண்டூர்க் கந்தசாமி கோயிலில் பூசை புரிபவர் எவ்வாறு அழைக்கப்படுவர்?

(10 புள்ளிகள்**)**

5. ‘‘சிவனுக்கு மேல் தெய்வம் இல்லை சித்திக்கு விஞ்சிய நூல் இல்லை”

அ. புறச்சந்தான குரவர்களின் பெயர்களை தருக.

ஆ. தில்லை வாழ் அந்தணர்களுள் ஒருவராக விளங்கிய சந்தான குரவர் யார்?

இ. ‘‘பட்ட கட்டையிற் பகற்குருடு போகிறது” என்ற கூற்று யாரால் யாருக்கு கேட்கும்படி கூறப்பட்டது?

(10 புள்ளிகள்**)**